43148



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivanery I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## சைவநெறி I

அறிவுறுத்தல்கள் :

- ❊ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ❊ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- ❊ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

**1.** இலங்கையில் சைவ மக்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்றதும் விநாயகசஷ்டி விரத காலத்தில் பாராயண வழக்கில் உள்ளதுமான நூல்
(1) சிவராத்திரிபுராணம் (2) ஏகாதசிபுராணம்
(3) பிள்ளையார் கதை (4) கந்தபுராணம்

**2.** 'இயல்வது கரவேல்' என்னும் நீதிமொழியை நமக்களித்தவர்
(1) கச்சியப்பர் (2) திருவள்ளுவர் (3) உலகநாதர் (4) ஔவையார்

**3.** ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும் சாதனங்கள் யாவை?
(1) விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம் (2) தனு, கரணம், புவனம்
(3) மனம், வாக்கு, காயம் (4) பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம்

**4.** திருவாதிரையை நிறைவு நாளாகக் கொண்டு சிவாலயங்களில் இடம்பெறுவது
(1) வரலட்சுமி விரதம் (2) விளக்கீடு
(3) திருக்கார்த்திகை விரதம் (4) திருவெம்பாவை

**5.** நித்திய பூசைகளில் ஏற்படும் குறைபாடுகளைத் தீர்க்கும் கிரியைகள் என சாஸ்திரங்களில் கூறப்படுவன
(1) காமியக் கிரியைகள் (2) பிராயச்சித்தக் கிரியைகள்
(3) நைமித்தியக் கிரியைகள் (4) கர்ஷணக் கிரியைகள்

**6.** ஒன்பதாம் திருமுறையில் அடங்குவன யாவை?
(1) திருவாசகம், திருக்கோவையார் (2) திருவிசைப்பா, திருமந்திரம்
(3) திருப்பல்லாண்டு, திருவாசகம் (4) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

**7.** திருநாவுக்கரசரால் "கூற்றாயினவாறு..." எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடப்பட்ட தலம்
(1) திருவீழிமிழலை (2) திருவீரட்டானேஸ்வரம்
(3) திருத்தில்லை (4) திருவாரூர்

**8.** நரகாசுரன் என்னும் அசுரனுடன் தொடர்புடைய பண்டிகை
(1) காமன் பண்டிகை (2) சித்திரை வருடப்பிறப்பு
(3) தீபாவளி (4) தைப்பொங்கல்

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

9. “மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு...” எனக் கூறும் தோத்திரநூல்
(1) திருமந்திரம் (2) பெரியபுராணம் (3) தேவாரம் (4) திருவாசகம்

10. ஒருவரை ‘சைவசமயி’ எனும் தகுதிநிலைக்கு உரியவராக்குவதற்குச் செய்யப்படும் தீட்சை
(1) சமயதீட்சை (2) விசேடதீட்சை (3) நிர்வாணதீட்சை (4) சாம்பவதீட்சை

11. ‘சங்கமர்’ என்னும் வீரசைவக் குருமாரால் பூசை செய்யப்படும் ஆலயம்
(1) கீரிமலை நகுலேஸ்வரம் (2) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்
(3) ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் (4) மன்னார் திருக்கேதீஸ்வரம்

12. கடவுளுக்கும் கடவுளின் அடியவர்களுக்கும் செய்யப்படும் தொண்டுகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) பசுபுண்ணியம் (2) பதிபுண்ணியம் (3) சைவதர்மம் (4) சனாதனதர்மம்

13. ‘சேத்திரபாலகர்’ என அழைக்கப்படும் தெய்வம்
(1) காத்தவராயர் (2) ஐயனார் (3) வைரவர் (4) முனியப்பர்

14. சரியைத் தொண்டு புரிவதனால் கிடைக்கும் முத்தி யாது?
(1) சாலோகமுத்தி (2) சாமீபமுத்தி
(3) சாருபமுத்தி (4) சாயுச்சியமுத்தி

15. வழிபாடு நிகழ்ந்து வரும் ஆலயத்தில் இறப்பு முதலான அநர்த்தங்களோ அல்லது தீட்டுக்குரிய வேறு சம்பவங்களோ நிகழுமாயின் அவற்றை நீக்கச் செய்யும் பிரதிஷ்டை
(1) அநாவர்த்தனம் எனப்படும். (2) ஆவர்த்தனம் எனப்படும்.
(3) புனராவர்த்தனம் எனப்படும். (4) அந்தரிதம் எனப்படும்.

16. சுந்தரருடன் தொடர்புடைய தொகுதி
(1) தம்பிரான் தோழர், வன்றொண்டன், பாலறாவாயர்
(2) திருநாவலூர், திருமுனைப்பாடி, பாலறாவாயர்
(3) திருவாரூர், மருணீக்கியார், தம்பிரான் தோழர்
(4) திருநாவலூர், ஆலாலசுந்தரர், வன்றொண்டன்

17. ‘ஞானம் எய்துவதன் மூலம் இறைவனோடு இரண்டற ஐக்கியமாகும் முத்தி நிலையை அடைவதற்கு வழி காட்டுவது’ எனும் பொருள்படுவது
(1) வேதங்கள் (2) சிவாகமங்கள்
(3) பகவத்கீதை (4) மகாபுராணங்கள்

18. நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் கலைகளை மட்டும் கொண்ட தொகுதி யாது?
(1) கூத்து, காவடி, கரகம் (2) கரகம், தாள இசை, நடனம்
(3) நாடகம், நடனம், இசை (4) சிற்பம், கூத்து, காவடி

19. செண்பகப் பெருமாள் என்னும் மன்னனால் தலைநகராகிய நல்லூரில் கட்டப்பட்ட ஆலயம் யாது?
(1) நல்லூர் கைலாசநாதர் கோயில் (2) நல்லூர் சட்டநாதர் கோயில்
(3) நல்லூர் கந்தசுவாமி கோயில் (4) நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில்

20. திருச்செந்தூர்ப் புராணம், ‘படனம்’ செய்யப்படும் முருகன் ஆலயம்
(1) நல்லூர் கந்தசுவாமி கோயில் (2) மண்டூர் கந்தசுவாமி கோயில்
(3) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் (4) வெருகல் சித்திரவேலாயுதர் கோயில்

21. கிரியை நெறியாவது,
(1) உடம்பு சார்ந்த புறத்தொழிலால் சிவனின் உருவத் திருமேனியைக் குறித்துச் செய்யப்படுவது
(2) அகத்தினால் சிவனின் அருவுருவத் திருமேனியைக் குறித்துச் செய்யப்படுவது
(3) அகத்தொழிலால் சிவனின் அருவத் திருமேனியைக் குறித்துச் செய்யப்படுவது
(4) முத்திருமேனிகளைக் கடந்து நிற்கும் சிவனை ஞானத்தினால் வழிபடுவது

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**22.** பகவத்கீதையுடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) பாளிமொழி, அருச்சுனன், ஞானயோகம்
(2) பாளிமொழி, உபதேசம், திரிபிடகம்
(3) தம்மபதம், உபதேசம், கிருஷ்ணபரமாத்மா
(4) சமஸ்கிருதமொழி, கிருஷ்ணபரமாத்மா, அருச்சுனன்

**23.** ‘விஞ்ஞானகலர்’ எனப்படும் ஆன்மாக்கள்
(1) விஞ்ஞான ரீதியான அறிவு நிரம்பப் பெற்றவர்களாவர்.
(2) ஆணவ மலத்தினால் மட்டும் பீடிக்கப்பட்டவர்களாவர்.
(3) ஆணவம், கன்மம் என்னும் இருமலங்களால் பீடிக்கப்பட்டவர்களாவர்.
(4) ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் பீடிக்கப்பட்டவர்களாவர்.

**24.** பஞ்சாங்கத்தில் வரும் கரணமாவது,
(1) திதியின் அரைப்பங்காகக் காணப்படும்.
(2) சந்திரன் வளர்வதையும் தேய்வதையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.
(3) சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடப்பதற்கு எடுக்கும் காலமாகும்.
(4) சூரியன் ஒரு இராசியில் பிரவேசிப்பது முதல் அந்த இராசியை விட்டு விலகுவது வரையான காலப்பகுதியாகும்.

**25.** ‘சித்திரபுத்திரன்’ என்னும் பெயர் தோன்றக் காரணமாக அமைந்தது யாது?
(1) சித்திரை மாத பௌர்ணமியில் உயிர்பெற்றமை
(2) பாவபுண்ணியங்களைக் கணக்கிடும் பணியைச் செய்தமை
(3) எமதர்மராஜாவுக்குத் துணையாக இருந்தமை
(4) தங்கப்பலகையில் வரையப்பட்ட சித்திரத்திலிருந்து உயிர்பெற்றமை

**26.** பின்வருவனவற்றுள் திலகவதியாருடன் தொடர்புடைய சம்பவம் யாது?
(1) திருவதிகை மடத்தில் தங்கியிருந்து தொண்டுகள் செய்தமை
(2) இல்லற வாழ்வினை இனிதாக மேற்கொண்டமை
(3) சமணர்களின் கருத்துக்களை ஏற்று நடந்தமை
(4) மருணீக்கியாருக்கு ஏற்பட்ட வெப்புநோயை நீக்கியமை

**27.** சிவஞானபோதத்தின் சார்பு நூலாக அமைவது
(1) வினாவெண்பா (2) சிவப்பிரகாசம்
(3) சிவஞானசித்தியார் (4) கொடிக்கவி

**28.** கடவுள் வழிபாட்டுக்குச் சிறந்த வழிமுறையாக அமைவது
(1) நந்தவனம் அமைத்தல் (2) தினந்தோறும் நீராடுதல்
(3) சிவத்தியானம் செய்தல் (4) திருக்கோயிலில் தொண்டு செய்தல்

**29.** ‘தந்திரங்கள்’ எனப்படுவன,
(1) சாக்த நெறிக்குரிய ஆகமங்கள் ஆகும்.
(2) காணாபத்திய நெறிக்குரிய ஆகமங்கள் ஆகும்.
(3) வைணவ நெறிக்குரிய ஆகமங்கள் ஆகும்.
(4) சைவ நெறிக்குரிய ஆகமங்கள் ஆகும்.

**30.** ‘விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை...’ எனக் குறிப்பிடும் நூல்
(1) சிவஞானபோதம் (2) சிவப்பிரகாசம் (3) திருவருட்பயன் (4) உண்மை விளக்கம்

**31.** அட்டாங்க யோகங்களுள் விழுமியங்களுடன் தொடர்புறுவன
(1) இயமம், நியமம் என்பனவாகும். (2) ஆசனம், பிராணாயாமம் என்பனவாகும்.
(3) பிரத்தியாகாரம், தாரணை என்பனவாகும். (4) தியானம், சமாதி என்பனவாகும்.

**32.** ‘மணிபல்லவம்’ எனக் குறிப்பிடப்படுவது
(1) நல்லூர் (2) மாந்தை
(3) நயினாதீவு (4) திருகோணமலை

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**33.** திருஞானசம்பந்தரால் "துணிவளர் திங்கள்..." என்ற பதிகம்
(1) திருமறைக்காட்டில் திறந்த கதவை அடைப்பதற்காகப் பாடப்பட்டது.
(2) தந்தையாரின் யாகத்திற்காக பொன் வேண்டிப் பாடப்பட்டது.
(3) அரவு தீண்டி இறந்த வணிகனை உயிர் பெறச்செய்வதற்காகப் பாடப்பட்டது.
(4) கொல்லிமழவன் எனும் அரசனது மகளின் முயலகன் நோயினைக் குணப்படுத்துவதற்காகப் பாடப்பட்டது.

**34.** "நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை..." என நீதி தவறாது நடுநிலைமையோடு வாழும் சமய வாழ்வினைச் சிறப்பித்துக் கூறியவர்
(1) சுந்தரர் (2) சம்பந்தர் (3) திருமூலர் (4) சேக்கிழார்

**35.** வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்பன
(1) பிரத்தியட்சப் பிரமாணம் ஆகும். (2) ஆப்தவாக்கியப் பிரமாணம் ஆகும்.
(3) அனுமானப் பிரமாணம் ஆகும். (4) ஐதிகப் பிரமாணம் ஆகும்.

**36.** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கிக் கௌரவித்த சமய நிறுவனம்
(1) திருவாவடுதுறை ஆதீனம் (2) தருமபுர ஆதீனம்
(3) சைவவித்தியாவிருத்திச் சங்கம் (4) சைவபரிபாலன சபை

**37.** பஞ்சபூதத் தலங்களில் அக்கினித் தலமாகத் திகழ்வது
(1) தில்லை (2) திருக்காளத்தி (3) காஞ்சி (4) திருவண்ணாமலை

- மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **38** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவுசெய்க.

| நூல்கள் | அரசர்கள் | தொடர்புடைய விடயங்கள் |
|---|---|---|
| A - பெரியபுராணம் | D - பிரபுடதேவராஜன் | G - குருந்தமர நிழலில் அருட்குரவரால் ஆட்கொள்ளப்பட்டமை |
| B - சிவபுராணம் | E - அநபாய சோழன் | H - திருவண்ணாமலைக் கோயில் வாசலில் முருகன் காட்சி கொடுத்தமை |
| C - கந்தரநுபூதி | F - அரிமர்த்தன பாண்டியன் | I - திருக்கூட்டச் சிறப்புரைத்தமை |

**38.** மாணிக்கவாசகருடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) A F G (2) B F G (3) B F H (4) C F G

**39.** அருணகிரிநாதருடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) B D H (2) B E H (3) C D H (4) C E H

**40.** சேக்கிழாருடன் தொடர்புடைய தொகுதி யாது?
(1) A D I (2) A E I (3) B E I (4) C E G

❊ ❊



Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 | T | I, II**

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)**

ශෛවනෙරි **I, II**
சைவநெறி **I, II**
Saivanery **I, II**

## சைவநெறி II

※ **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ **முதலாம்** வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் **இரண்டாம்** வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) மாணிக்கவாசகருக்கு 'தென்னவன் பிரமராயன்' என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டமைக்கான காரணம் யாது?
(ii) சுவாமி விபுலாநந்தர் குறிப்பிடும் இறைவன் உவக்கும் இன்மலர்கள் **இரண்டினைத்** தருக.
(iii) திருமணக் கிரியையில் இடம்பெறும் பூர்வாங்க சம்பிரதாயங்கள் **இரண்டினை** எழுதுக.
(iv) 'பிரதிஷ்டை' என்பதன் பொருள் விளக்கத்தினைத் தருக.
(v) ஈழத்தில் திரௌபதை அம்மனுக்குரிய ஆலயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(vi) 'மாகேஸ்வர பூசை' என்றால் என்ன?
(vii) சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஆன்மாக்களின் இயல்புகள் **இரண்டினைத்** தருக.
(viii) சைவ சமயத்தவர் கைக்கொள்ள வேண்டிய நித்திய கருமங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
(ix) திருமுறைப் பாடல்களைப் பண்ணுடன் பாடுவதனால் ஏற்படும் நன்மைகள் **இரண்டினை** எழுதுக.
(x) சைவசமய விழுமியங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

**2.** (i) மேல்வரும் பதிகங்களுள் எவையேனும் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) "நாம் ஆர்க்கும் குடியல்லோம்..."
(ஆ) "கற்றவர் விழுங்கும்..."
(இ) "தூக்கும் பனுவல்..."
(ஈ) "மீளா அடிமை உமக்கே..."
(உ) "சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்..."

(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

**3.** "அன்பு வழியில் மட்டுமன்றி அறிவு வழியிலும் இறைவனை அடையலாம் என சந்தானகுரவர்கள் வழிகாட்டியுள்ளனர்."

(i) அகச்சந்தான ஆசாரியர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.
(ii) 'சகலாகம பண்டிதர்' எனப்படுபவர் யார்? அவர் எழுதிய சித்தாந்த நூல்களைத் தருக.
(iii) உமாபதி சிவாச்சாரியாரின் பெருமைகளையும் அவரது சைவசித்தாந்தப் பணிகளையும் சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** “மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்”
- திருவாசகம்

(i) ஆகமங்கள், ‘சிறப்பு நூல்’ என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

(ii) சிவாகமங்கள் இருபத்தெட்டும் தோன்றிய, சிவபிரானின் திருமுகங்களில் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) “திருக்கோயில் கிரியைகளுக்கு ஆகமங்களே பிரமாணங்களாக அமைந்துள்ளன.” இக்கூற்றினைச் சுருக்கமாக விளக்குக.

**5.** “ஈழத்தில் மிகவும் தொன்மைச் சமயமாக சைவம் திகழ்கின்றது.”

(i) ஈழத்தில் தேவாரப்பாடல் பெற்ற தலங்களைக் குறிப்பிடுக.

(ii) சைவசமய மேன்மைக்கு சைவபரிபாலனசபை ஆற்றிவரும் பணிகள் **மூன்றினை** எழுதுக.

(iii) ஈழத்தில் சைவத்தின் தொன்மையினைச் சுருக்கமாக விளக்குக.

**6.** “சைவம் வழிப்படுத்துகின்ற வாழ்க்கை நெறி ஆசாரத்தோடு கூடியதாகும்.”

(i) ஆசாரத்தின் **இரு** வகைகளையும் தருக.

(ii) வீட்டிலும் ஆலயத்திலும் செய்யும் வழிபாடுகளின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஆசார நெறிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) இறையருளைப் பெறுவதற்கு சைவ சமயத்தவராகிய நாம் செய்யத்தக்கனவற்றைச் சுருக்கமாக விளக்குக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) விரதங்கள்

(ii) சைவ விழுமியங்களில் ஈகை

(iii) நாகதம்பிரான் வழிபாடு

(iv) குருலிங்கசங்கம வழிபாடு

❊ ❊ ❊

Download all Past papers >> https://bookbeekid.com/resource/past-papers/